www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

SALEM DISTRICT

SMS

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

11 - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

10X1=10

I கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் ஏற்புடைய விடையைக் குறியீட்டுடன் எழுதுக.

1. தஞ்சைப் பெரிய கோவிலை இராசராச சோழன்தான் கட்டினான் என்று உறுதி செய்தவர்
அ) பிரடிரிகா ஆ) ஷீல்ஸ்
இ) எஸ்.கே. கோவிந்தசாமி ஈ) ஐராவதம் மகாதேவன்

2. 'கவிதைக்கிரீடம்' எனப் போற்றப்படும் நூல்
அ) குற்றாலக் குறவஞ்சி ஆ) திருச்சாழல் இ) திருக்கோவையார் ஈ) தேவாரம்

3. இளையராஜா அறிமுகப்படுத்திய இசை
அ) சூஃபி ஆ) கல்யாணி இ) பஞ்சமுகி ஈ) ஆனந்த பைரவி

4. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று
அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

5. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு, காரணம் சரி

6. அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன் - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

7. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க
அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

8. தொல்காப்பியர் குறிப்பிடும் வண்ணங்களின் எண்ணிக்கை
அ) 90 ஆ) 96 இ) 32 ஈ) 20

9. திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
அ) வீரமாமுனிவர் ஆ) ஜி.யு.போப் இ) ஜார்ஜ் எல் ஹார்ட் ஈ) ஹீராஸ் பாதிரியார்

10. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க்க.
அ) ஆத்மாநாம் - 1) ஒரு புளியமரத்தின் கதை
ஆ) சுந்தரராமசாமி - 2) பால்நிலாப் பாதை
இ) பாரதிதாசன் - 3) காகிதத்தில் ஒரு கோடு
ஈ) இளையராஜா - 4) சேரதாண்டவம்
i) 3 1 2 4 ii) 3 4 2 1 iii) 3 1 4 2 iv) 1 3 4 2

### பகுதி - ஆ

II எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3 X 2 = 6

11. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?
12. சாழல் - விளக்கம் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

14. பாடாண்திணை – விளக்கம் தருக.

**III எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.** 5 X 2 = 10

15. அலைகடல், புதுக்கியவர் – இலக்கணக் குறிப்புத் தருக.

16. **ஏதேனும் ஒன்றனுக்குப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.**

அ) பயமில்லை ஆ) புவியாட்சி

17. **கலைச்சொல் எழுதுக.**

அ) Trade union ஆ) Apartment

18. நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.

**(பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக மாற்றுக.)**

19. **தேவையான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

மறைமலையடிகள் மரணத்தின் பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்

20. **அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களாக் கண்டறிக.**

அ) அறிவைத் தேடிப்போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம். (அகம்)

ஆ) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்)

### பகுதி – இ

**IV எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 X 4 = 12

21. கலைச் சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

22. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

23. சேரநாடு செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

24. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

25. **பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து, அதன் மையக் கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினைச் சுட்டுக.**

*தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,*
*கொண்டல்கள் முழவின் ஏங்க, குவ்வளைகண் விழித்துநோக்க,*
*தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனதுபாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ.* **– கம்பர்**

### பகுதி – ஈ

**V விரிவான விடையளி.** 1 X 6 = 6

26. அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

*(அல்லது)*

ஆ) தஞ்சைப் பெரிய கோவிலின் சிறப்புகளை விவரித்து எழுதுக.

27. **அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

அ) 'சிற்றூரும் வரப்பெடுத்த' எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

**ஆ) விடுபட்ட சொற்களை நிரப்புக.**

1) எழுத்து, ..............சீர், தளை .............. தொடை.

2) தனிமொழி – அறிவு : .................. – வண்ணமயில் ; பொதுமொழி ..................... .



M.JEEVA. M.A,B.Ed,M.Phil., PGT (TAMIL)

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com